පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
பொலிஸ் ஊடகப் பிரிவு
POLICE MEDIA DIVISION
සෙත්සිරිපාය, බත්තරමුල්ල

තැ.පෙ.අංකය / த. பெ.இ / Po.Box No — 10120
ෆැක්ස් / தொலைநகல / Fax — 011-2171635

දුරකථන / தொலைபேசி / Telephone — 011-2887973 (HUNTING)
වෙබ්.ලිපිනය / இணையதளம் / Web Site — www.Police.lk
ඊ මේල් / மின்னஞ்சல் / E-mail — dir.media@police.gov.lk

මගේ අංකය / எனது இலக்கம் / My NO — 463 / 2024
ඔබේ අංකය / உமது இலக்கம் / Your No — / 2024
දිනය / திகதி / Date — 16/03/2024

**நேரம் 1615**

## ஊடக அறிக்கை

**தலைமை ஆசிரியர் / செய்தி ஆசிரியர்,**
**செய்தி பணிப்பாளர்/ செய்தி முகாமையாளர்**
**சகல ஊடக நிறுவனங்கள்.**

## தமிழ் மொழியில் முறைப்பாடுகள் மற்றும் தகவல்கள் வழங்க 107 அவசர அழைப்பு மத்திய நிலையம் ஸ்தாபித்தல் – பொலிஸ் தலைமையகம்.

24 மணிநேரமும் சேவையிலுள்ள “107” அவசர அழைப்பு மத்திய நிலையம் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் கௌரவ பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அவர்களின் தலைமையில் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக அவர்கள், பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் அவர்கள் மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகளின் பங்கேற்புடன் 2024.03.16 ஆம் திகதி இன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

இத் திட்டமானது கௌரவ பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க மாண்புமிகு சனாதிபதி அவர்களின் வழிகாட்டலின் பேரில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் செறிந்து வாழும் தமிழ் மக்களை அடிப்படையாக கொண்டு “107” எனும் அவசர அழைப்பு தொலைபேசி இலக்கமானது 24 மணிநேரமும் இயங்குவதுடன், இச் சேவைக்காக தமிழ் மொழி பேசும் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவ் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு சிங்களம் மொழியிலும் முறைப்பாடு மற்றும் தகவல்களை வழங்க முடியும்.

இதன் ஊடாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் மக்கள் மற்றும் அப்பிரதேசங்களுக்கு தனது தேவைகளுக்கேற்ப வருகைத்தரும் மக்களின் உயிர் மற்றும் சொத்துகளுக்கு ஆபத்து ஏற்பட்டால் 107 எனும் அவசர அழைப்பு மத்திய நிலையத்திற்கு அழைப்புவிடுத்து பொலிசாரின் உதவியை உடனடியாக பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இத் தொலைபேசி இலக்கத்தினூடாக குற்றம் மற்றும் குற்றவாளிகள் தொடர்பான தகவல்கள், சட்ட விரோத போதைப் பொருள்கள், மதுபானம் விற்பனையாளர்கள், சுற்றுச் சூழல் மாசுபடுத்தல், வீதி விபத்துகள், இயற்கை மற்றும் மனித நடவடிக்கையால் ஏற்படும் பேரழிவுகள் தொடர்பான முறையான தகவல்களை அவசர அழைப்பு மத்திய நிலையத்திற்கு அறிவிக்க முடியும்.

பொதுமக்களுக்கு முறையான மற்றும் பயனுள்ள சேவையை வழங்குவதற்கு இவ் மத்திய நிலையம் நிறுவப்படுவதற்கான நோக்கமாகும். இத் தொலைபேசி மத்திய நிலையத்திற்கு கிடைக்கப்பெறும் தகவல்கள் தொடர்பான இரகசியத்தண்மை பாதுகாக்கப்படுவதுடன், பொதுமக்களுக்கு உடனடி சேவை வழங்குவதே எமது நோக்கமாகும்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம்.
பொலிஸ் ஊடகப் பிரிவு.